கரூரில் நடைபெற்ற அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைகள் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, 3558 பயனாளிகளுக்கு, ரூ.37 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் கலெக்டர் மீ. தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர் .இளங்கோ, க. சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணைமேயர் தாரணி சரவணன், கூட்டுறவு இணைப்பதிவாளர் ப.கந்தராஜா உள்ளிட்டோர் உள்ளனர்.

3,65,900 பயனாளிகளுக்கு ரூ.2,976.22 கோடி மதிப்பில்

கரூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை சார்பில் பல்வேறு கடன்கள் வழங்கல்!

அமைச்சர் செந்தில் பாலாஜி தகவல்!

கரூர், நவ.19-

கரூர் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் கூட்டுறவுத் துறையின் சார்பாக 3,65,900 பயனாளிகளுக்கு ரூ.2,976.22 கோடி மதிப்பில் பல்வேறு வகையான கடன்கள் வழங்கப்பட்டுள்ளது என 71 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் அமைச்சர் வி. செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

கரூர் அட்லஸ் கலையரங்கத்தில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நடைபெற்றது. மின்சாரம் மதுவிலக்கு, ஆயத்தீர்வை துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி 3558 பயனாளிகளுக்கு ரூ.37.01 கோடி மதிப்பினை அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மீ.தங்கவேல், தலைமை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் வெ. கவிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேசியதாவது:-

கரூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் பல லட்சம் பயனாளிகள் பல்லாயிரம் கோடி அளவுக்கு கடன்கள் பெற்று தங்களது பொருளாதாரத்தையும். வாழ்வாதாரத்தை மேம்படுத்தி உள்ளார்கள். அந்த வகையில் கடந்த மூன்று ஆண்டுகளில் கூட்டுறவுத் துறையின் சார்பாக 1,1,5183 பயனாளிகளுக்கு ரூ.945.34 கோடி மதிப்பில் பயிர் கடன்களும். 49,181 பயனாளிகளுக்கு ரூ.458.65 கோடி மதிப்பில் கால்நடை பராமரிப்பு கடன்களும், 6807 பயனாளிகளுக்கு ரூ.62.20 கோடி மதிப்பில் மத்திய கால கடன்களையும். 3601 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.155.63 கோடி மதிப்பில் குழு கடன்களையும். 2334 பயனாளிகளுக்கு ரூ.7.45 கோடி மதிப்பிலான சிறு வணிக கடன்களையும், 506 பயனாளிகளுக்கு ரூ.3.71 கோடி மதிப்பிலான டாப்செட்கோ கடன்களையும், 136 பயனாளிகளுக்கு ரூ.2.10 கோடி மதிப்பிலான டாம்கோ கடன்களையும், 355 பயனாளிகளுக்கு ரூ.269 போடி மதிப்பிதாட்கோ கடன்களையும் 912 பயணாளிகளுக்கு ரூ.6.86 கோடி மதிப்பிலான மாற்றுத்திறனாளிகள் கடன்களையும். 186825 பயனாளிகளுக்கு ரூ.1331.50 கோடி மதிப்பிலான நகை கடன்களையும் என மொத்தம் 3,65,900 பயனாளிகளுக்கு ரூ.2975.22 கோடி மதிப்பிலான கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

தேதியில் நமது கழக அரசு பொறுப்பேற்றதும் பெண்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவு நிறுவனங்களில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் பெற்றுள்ள அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டு 15 இலட்சத்து 68 ஆயிரம் மகளிர்க்கு வாழ்வாதாரம் உயர நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதில் கரூர் மாவட்டத்தில் மட்டும் 13.064 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ரூ.26.78 கோடி மதிப்பில் பயன்பெற்றுள்ளனர்.

கடந்த ஆட்சியின் காலத்தில் கூட்டுறவுத்தறையின் வளர்ச்சியைப் பொருத்த வரை நமது மாவட்டத்தில் உள்ள 84 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் 9 சங்கங்கள் மட்டுமே 5 கோடிக்கு மேலான கடன்களை வழங்கியிருந்தன.

ஆனால் நமது கழக அரசு அமைந்த பிறகு திராவிட மாடல் நாயகனின் வழிகாட்டுதலோடு இன்று அனைத்து பகுதிகளுக்கும் எவ்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டுமென்பதற்காக, ஒருங்கிணைந்த வளர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அனைவருக்குமான இந்த கூட்டுறவுத்துறை ஏதோ ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் கடன் கொடுத்து விட்டு, பல இடங்களில் கடனே வழங்காமல் இருக்கக்கூடிய நிலையினை மாற்றி அனைத்து சங்கத்திலும் அனைத்து பகுதிகளிலும் மக்களின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு ரூ.6.00 கோடிக்கு மேல் கடன் வழங்கப்பட்டு தமிழ்நாட்டிலேயே முதல் மாவட்டமாக நமது கரூர் மாவட்டம் உள்ளது.

கரூர் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் மூலமாக, பெண்களின் பங்கேற்பினை அதிகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக பெண்களுக்கான ஒரு கூட்டுறவு சங்கம் துவங்கிட முன்னெடுத்திருக்கிறோம். அதன்படி மகளிர் சுய உதவிக்குழு கூட்டுறவு கடன் மற்றும் சேவை சங்கம் என்ற பெயரில் சங்கம் துவங்கிட திட்டவரைவு தயார் செய்து கூட்டுறவுத்துறை அமைச்சரிடம் வழங்கி அதை சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு அந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக நமது மாவட்டத்தில் தென்னிலை மற்றும் மகாதானபுரத்தில் இரண்டு மகளிர் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நமது கூட்டுறவு சங்கங்களின் மூலம் மழைப் பொழிவு அதிகம் உள்ள மற்றும் தண்ணீர் வசதி உள்ள இடங்களில் மட்டுமே பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தைப் பொருத்தவரை பரமத்தி, அரவக்குறிச்சி போன்ற வறட்சி மிகுந்த பகுதிகளில் நமது விவசாய பெருமக்கள் ஆடு, மாடு போன்ற கால்நடைகளை கொண்டு அதன் மூலமாக தமது பொருளாதாரத்தினை மேம்படுத்தி வருகிறார்கள்,

அவர்களுக்கும், அரசு எப்படி பயிர்க்கடன்களுக்கு வட்டியில்லா கடன் வழங்கி வருகின்றதோ அதே போல அவர்களுக்கும் நமது திராவிட மாடல் நாயகன் அரசு அமைந்த பின்னர் 2021ஆம் ஆண்டு முதல் கால்நடை பராமரிப்புக்காக வழங்கப்படும் கடன்களையும் வட்டியில்லாமல் வழங்கி அவர்களுடைய உற்பத்தி செலவினங்களை குறைத்து அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக கால்நடை பராமரிப்பு என்ற வட்டியில்லாக் கடனையும் பயிர்க்கடனோடு இணைந்து வழங்கி தமிழ்நாட்டிலேயே அதிக கடன் வழங்கிய மாவட்டமாக உள்ளது.

இதன் மூலம் 20,077 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். எனவே விவசாய மக்களும் கால்நடை வளர்ப்பு மக்களும் இந்த அரசுக்கு என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கரூர் மாட்டத்தைப் பொறுத்தவரை நமது மாவட்டம் துவங்கியதிலிருந்து கூட்டுறவு பட்டயப் படிப்பிற்காக அருகே உள்ள திருச்சி, திண்டுக்கல், நாமக்கல் என சென்றுவந்த நிலை மாற்றப்பட்டது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனுமதியோடு 28 ஆண்டுகளுக்குப் பிறகு நமது கரூர் மாவட்டத்தில் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக நமது மாவட்டத்தைச் சார்ந்த ஏறக்குறைய 100க்கும் மேற்பட்ட மாணவ - மாணவியர்கள் கூட்டுறவு மேலாண்மை பயிற்சியை பெற்று வருகின்றார்கள்.

இதன் மூலமாக நமது மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கே நமது கூட்டுறவுத்துறையுடைய பணியில் சேர்வதற்கான வாய்ப்பை இந்த கழக அரசு வழங்கியிருக்கிறது என்றால் இதற்கு இந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாணவியர்களும் நமது திராவிட மாடல் நாயகருக்கு நன்றி கடன்பட்டுள்ளோம்.

கரூர் மாவட்டத்தில் பொதுவிநியோகத் திட்டத்தில் 500 குடும்ப அட்டைகளுக்கு அதிகமாக உள்ள 16 பகுதிநேர கடைகள் முழு நேர கடைகளாக மாற்றம் செய்யப்பட்டு, இன்று அந்த கடைகள் வாரத்தின் அனைத்து வேலை நாட்களிலும் பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சர் ஆணைப்படி இந்த 3 ஆண்டுகளில் அடிப்படை கட்டுமான வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக ஏறக்குறைய 25 புதிய நியாய விலைக்கடைகள் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 24 நியாய விலைக்கடைகளுக்கு கட்டடம் பணி நடைபெற்று வருகின்றது.

நமது மாவட்டத்தில் ஒரு புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ஆலத்தூர். ஆர்ச்சம்பட்டி மக்கள் பயன்பெறும் வகையில் பதிவு செய்யப்பட்டு விரைவில் துவங்கப்படவுள்ளது. மேலும் புதிதாக மூன்று கிளைகள் நமக்கு துவங்கிட முதல்வர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்.

முதலமைச்சரின் உத்தரவின்படி நமது கரூர் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களும் கணினி மயமாக்குதல் பணியில் மாநிலத்திலேயே முதலிடம் பெற்றுள்ளது என்பதை இங்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். தற்போது நமது மாவட்டத்தில் கரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திலிருந்தும், குளித்தலை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திலிருந்தும், கரூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மூலமாகவும் "முல்லை" என்ற வர்த்தக பெயரில் ராகி மாவு, கோதுமை மாவு மற்றும் எண்ணெய் வகைகள் மற்றும் விவசாய பெருமக்களுடைய பயன்பாட்டிற்கு தேவையான தரமான வேப்பம்புண்ணாக்குகள் போன்றவை எல்லாம் நமது கூட்டுறவு நிறுவனங்களே தயாரித்து கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவே விவசாய பெருமக்களுக்கும். பொது மக்களுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கடந்த ஆட்சிக்காலத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் 52.332 உறுப்பினர்களுக்கு ரூ.558.92 கோடி அளவில் கடன் வழங்கப்பட்டிருத்தது. தற்போது நமது கழக ஆட்சி பொறுப்பேற்ற பின்பு இது ஏறக்குறைய பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 2 மடங்கு உயர்ந்து 1.30.246 ஆக உயர்ந்து நபர்களுக்கு ரூ.1066.96 கோடி அளவில் கடன் வழங்கப்பட்டுள்ளது

2 மடங்கு அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. நமது ஆட்சி விவசாயிகளுக்கும். பொதுமக்களுக்கும் எண்ணற்ற திட்டங்களை அறிவித்தும் அதனை சிறப்பாக செயல்படுத்தியும் பொதுமக்கள் நலன் காக்கும் அரசாக செயல்பட்டு வருகின்றது என்பதை நீங்கள் அனை வரும் எண்ணிப் பார்க்க வேண்டும் என செந்தில்பாலாஜி பேசினார்.

பின்னர் 1754 பயனாளிகளுக்கு ரூ.10.93 கோடி மதிப்பில் பயிர் கடன்களையும், 598 பயனாளிகளுக்கு ரூ.5.74 கோடி மதிப்பில் கால்நடை பராமரிப்பு கடன்களையும். 346 பயனாளிகளுக்கு ரூ.3.50 கோடி மதிப்பில் மத்திய காயங்களையும். 73 மகளிர் உதவி குழுக்களின் 747 உறுப்பினர்களுக்கு ரூ.5.94 கோடி மதிப்பிலான குழு கடன்களையும். 4 பயனாளிகளுக்கு ரூ0.04 கோடி மதிப்பிலான டாப்செட்கோ கடன்களையும், 28 பயனாளிகளுக்கு ரூ.1.22 கோடி மதிப்பிலான இதர கடன்களையும். 81 பயனாளிகளுக்கு ரூ.0.64 கோடி மதிப்பில் டாம்கோ கடன்களையும் என மொத்தம் 3558 பயனாளிகளுக்கு ரூ.37.01 கோடி மதிப்பிலான கடன் உதவிகளையும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளையும், சிறந்த சங்கங்களுக்கு பாராட்டு கேடயங்களையும், வருவாய் துறையின் சார்பில் மணல்மேடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு அலுவலக கட்டிடம் மற்றும் கிடங்கு கட்டவும். புகலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கும் முன் நுழைவு ஆணையினையும் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

முன்னதாக கூட்டுறவு பல்வேறு பிரிவுகளின் கண்காட்சி அரங்குகளை அமைச்சர் பார்வையிட்டார்.

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், ஜோதி மஹாலில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா2024, மாவட்ட அளவிலான அரசு விழா நேற்று முன்தினம் (17.11.2024) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், முன்னாள் அமைச்சர் முனைவர் பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தடங்கம் பெ.சுப்பிரமணி, மனோகரன், இன்பசேகரன், தருமபுரி நகர்மன்ற தலைவர் திருமதி.மா.லட்சுமி நாட்டான் மாது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆர்.கவிதா, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் கு.த.சரவணன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் திருமதி.எஸ்.மலர்விழி உட்பட கூட்டுறவாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

தருமபுரி மாவட்டத்தில் - கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயம் -

ரூ.38.18 கோடியில் பல்வேறு கடனுதவிகள் - அரசு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்!

தருமபுரி, நவ. 19-

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், ஜோதி மஹாலில் 17.11.2024 அன்று நடைபெற்ற 71-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா-2024, மாவட்ட அளவிலான அரசு விழாவில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி முன்னிலையில் சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்களையும், 68 கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு ரூ.38.18 கோடி மதிப்பிலான பல்வேறு கடனுதவிகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்கள்.

இவ்விழாவில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:-

கூட்டுறவு வார விழாவானது, அகில இந்திய அளவில் ஆண்டுதோறும் இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த தினமான நவம்பர் 14-ஆம் தேதி ஆரம்பித்து நவம்பர் 20-ஆம் தேதி வரை சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. தற்பொழுது 71-வது அகில இந்தியக் கூட்டுறவு வாரவிழா முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளில் கூட்டுறவு அமைப்புகளின் பங்கு" எனும் பிரதானப் பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் 523 கூட்டுறவு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் 508 முழுநேர நியாய விலைக்கடைகளும், 587 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் என ஆக மொத்தம் 1095 நியாய விலைக்கடைகளும் மற்றும் 112 நகரும் நியாயவிலைக்கடைகள் மூலம் செயல்பட்டு வருகின்றன. இந்நியாய விலைக் கடைகளில் 4,70,751 தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி, கோதுமை, சர்க்கரை, பாமாயில் மற்றும் துவரம்பருப்பு ஆகியன விநியோகிக்கப்பட்டு வருகிறது.

நடப்பு நிதியாண்டில் நாளது வரை பயிர்க்கடன் உட்பட இதர கடன்கள் ரூ.2408.56 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1,27,779 நபர்களுக்கு ரூ.1237.47 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் விளைபொருட்களை இடைத்தரகர்களின் தலையீட்டின்றி நல்ல விலைக்கு விற்பனை செய்து கொடுப்பதில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் செயல்பட்டு வருகின்றது. மேலும் விவசாயிகளுக்கு தேவைப்படும் உரம் மற்றும் இடுபொருட்களை குறைந்த விலையில் கூட்டுறவு சங்கங்கள் விற்பனை செய்து வருகின்றது.

கூட்டுறவு சங்கங்கள் / வங்கிகள் மூலம் பயிர்க்கடன் மட்டுமின்றி விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் கடன்கள் குறைந்த வட்டிவிகித்தில் நகைக் கடன்கள், பண்ணைச்சாராக் கடன்கள், மகளிர் சுயஉதவிக்குழு கடன்கள், சிறு வணிகக் கடன்கள், மாற்றுத் திறனாளிகள் கடன்கள், டாப்செட்கோ திட்டத்தின் கீழ் கடன்கள், டாம்கோ திட்டத்தின் கீழ் கடன்கள், தாட்கோ திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க்கடன்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் தாங்கள் பெற்ற பயிர்க்கடனை தவணை தவறாது திரும்ப செலுத்துபவருக்கு 7% வட்டித் தொகை முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக்கொண்டு வட்டியே இல்லாத விவசாயக் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் 9 இடங்களில் கூட்டுறவு மருந்தகங்கள் (Coop Medicals) செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் பொதுமக்களுக்கு அனைத்து மருந்துகளுக்கும் MRP விலையில் 20% வரை தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் இம்மாவட்டத்தில் புதியதாக 10 முதல்வர் மருந்தகம் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் ஏழை எளிய மக்கள் உடனுக்குடன் மருந்துகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும்எனவேகூட்டுறவுத்துறை மூலம் வழங்கப்படும் அனைத்து கடன்கள் மற்றும் சேவைகளை முழுமையாகப் பயன்படுத்தி தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

முன்னதாக, இன்றைய தினம் நடைபெற்ற 71-வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவில் கூட்டுறவுத் துறை, வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பார்வையிட்டார்கள்.

மேலும், 71-வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவில் 10 நபர்களுக்கு பயிர்க்கடனாக ரூ.7.79 இலட்சமும், கால்நடை பராமரிப்பு கடன் 5 நபர்களுக்கு ரூ.2.80 இலட்சமும், 48 நபர்களுக்கு மகளிர் சுய உதவிக்குழுக்கடன்,டாம்கோ குழுக்கடன், மாற்றுத் திறனாளி கடன்கள் என ரூ.288.29 இலட்சமும், 3 நபர்களுக்கு ரூ.33.00 இலட்சம் மதிப்பீட்டில் டிராக்டர்களும், 2 நபர்களுக்கு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் ஈச்சர் வாகனமும் ஆக மொத்தம் இவ்விழாவில் 68 கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு ரூ.38.18 கோடி மதிப்பிலான பல்வேறு கடனுதவிகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்கள்.

இவ்விழாவில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், முன்னாள் அமைச்சர் முனைவர் பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தடங்கம் பெ.சுப்பிரமணி, மனோகரன், இன்பசேகரன், தருமபுரி நகர்மன்ற தலைவர் திருமதி.மா.லட்சுமி நாட்டான் மாது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆர்.கவிதா, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் கு.த.சரவணன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் திருமதி.எஸ்.மலர்விழி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் திருமதி.தேன்மொழி, வருவாய் கோட்டாட்சியர் திருமதி. இரா. காயத்ரி, மாவட்ட வழங்கல் அலுவலர் செம்மலை, தருமபுரி சரகம் கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் பெ.அன்பழகன், கைம்பெண் நலவாரிய உறுப்பினர் திருமதி.எம்.ரேணுகா தேவி உட்பட கூட்டுறவாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பொன்னாப்பூர் கீழ்பாதி பொ.செகதீசன்

நவம்பர் 19 (1980)

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின்மீது கொண்ட தீவிரப் பற்றினால், கழகம் தொடங்கிய காலத்திலிருந்து தீவிரமாக கழகப் பணியாற்றியவர்.

திராவிடநாடு, முரசொலி, நம்நாடு, மாலைமணி ஆகிய கழக இதழ்களை வாங்கி, அதனை பொதுமக்களுக்கும், தோழர்களுக்கும் வழங்கி கழக கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.

ஒரத்தநாடு, பொன்னாப்பூர் கீழ்பாதி கிளைக் கழகச் செயலாளராகவும், அவைத் தலைவராகவும், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

1952 முதல் 1978 வரை தொடர்ந்து ஊராட்சி மன்றத் தலைவர் பதவி வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.